Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.13/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.4-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | வாசுதேவன் | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | | முனுசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | அகரம்சித்தாமூர் | வயது | - | 45 |

23.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு-ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அகரம்சித்தாமூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது சித்தப்பா மகள். கடந்த 18.04.2010 ம் தேதி அ.சா.1 க்கும் 1ம் எதிரிக்கும் பில்ராம்பட்டில் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போது எனது சித்தப்பா மகளுக்கு 15 பவுன் நகையும், கட்டில் பீரோ, இதர சீர்வரிசை சாமான், இருசக்கர வாகனத்திற்காக ரூ-50 ஆயிரம் கொடுத்தோம்.

2. திருமணத்திற்கு பின் எனது சித்தப்பா மகள் அங்கு 3 மாதங்கள் ஊரில் வசித்து வந்தார்கள். அதன்பிறகு பெங்களூருக்கு அழைத்துச் சென்றார் பின்பு அ.சா.1 , 7 மாதம் கர்ப்பமாக இருப்பதால் அவரை மீண்டும் ஊரில் விட்டுவிட்டு 1 வது எதிரி பேங்களூர் சென்றுவிட்டார். பின்பு எனது சித்தப்பா மகளை எதிரிகள் கொடுமை செய்ய ஆரம்பித்தார்கள்.

3. பின்பு எதிரி தவமணி அ.சா.1 ஐப் பார்த்து நீ கருப்பாக இருக்கிறாய் என் மகன் விருப்பப்பட்டதால் தான் உனக்கு திருமணம் செய்து வைத்ததாக கூறினார்கள். எதிரி

மூர்த்தி அ.சா.1ஐப் பார்த்து தேவிடியா நீ கருப்பாக இருக்கிறாய் என்று கூறினார். எதிரி ஏழுமலை அ.சா.1ஐப் பார்த்து என் தம்பி தான் பெங்களூரில் இருக்கிறானே நான் கூப்பிட்டால் நீ வரமாட்டாயா என தவறாக பேசினார். மேலும் எதிரிகள் வீட்டின் கதவை பூட்டிவிட்டார்கள். அதனால் அ.சா.1, 4 நாட்கள் வீட்டின் வெளியே இருந்தார்.

4. பின்பு எதிரிகள் அ.சா.1ஐ வீட்டிற்கு அழைக்காததால் அ.சா.1 அவரது தாய் வீட்டிற்கு வந்துவிட்டார். பின்பு அ.சா.1 குழந்தை பிறந்து 5 மாதங்கள் கழித்து நானும் சாந்தியும் எதிரிகள் வீட்டிற்கு சென்று அ.சா.1ஐ வீட்டுக்குள் கூப்பிட்டு போங்கள் என்று சொன்னோம். 1வது எதிரி பெங்களூரில் இருப்பதாகவும் அதனால் நாங்கள் கூப்பிட்டு செல்லமாட்டோம் என்று கூறினார்கள்.

5. பின்பு எதிரிகள் வீட்டின் அருகில் இருக்கும் ராஜேந்திரன் என்பவரை விசாரித்தபோது 1வது எதிரி வேறொரு பெண்ணுடன் திருமணம் நடந்ததாக சொன்னார். பின்பு நாங்கள் 1வது எதிரியை ஊரிலும், பெங்களூரிலும் தேடிப்பார்த்தோம். ஆனால் 1வது எதிரி கிடைக்கவில்லை. இந்த தைப்பூசம் அன்று 1வது எதிரி அவரது 2வது மனைவி மற்றும் குழந்தைகளுடன் வந்ததை பார்த்ததாக ராஜேந்திரன் என்னிடம் சொன்னார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இந்த வழக்கானது 2016 வருடத்திய வழக்கு என்று எடுத்து கூறியும், போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.13/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கூலிவேலை |
| பெயர். | - | சாந்தி | வட்டம் | - | விக்கிரவாண்டி |
| க/பெ. | | வெங்கடேஷ் | சமயம் | - | |
| கிராமம் | - | செம்மேடு | வயது | - | 46 |

23.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு-ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது செம்மேடு கிராமத்தில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது தங்கை. அ.சா.2 எனது அம்மா. கடந்த 2010 ம் வருடம் அ.சா.1 க்கும் 1ம் எதிரிக்கும் பில்ராம்பட்டில் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போது எனது தங்கைக்கு 15 பவுன் நகையும், சாமான் செட்டு மற்றும் இருசக்கர வாகனத்திற்காக ரூ-50 ஆயிரம் கொடுத்தோம்.

2. திருமணத்திற்கு பின் எனது தங்கை அங்கு 8 மாதங்கள் நல்ல முறையில் வாழ்ந்து வந்தாள். பின்பு எதிரி தவமணி என் தங்கையிடம் மேற்கொண்டு ரூ.50 ஆயிரம் பணத்தை வாங்கி வரச்சொல்லி அனுப்பி வைத்தார்கள். நான் என் அம்மா என் தங்கையிடம் தற்போது கடனாக இருக்கிறது பணம் இல்லை என்று சொல்லி எனது தங்கையை மீண்டும் எதிரிகள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது எதிரிகள் என் தங்கையை கொடுமை செய்து வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள்.

3. அப்போது எதிரி மூர்த்தி எனது தங்கையை கருப்பாக இருப்பதாகவும், வாழ விருப்பம் இல்லை என்றும் அவருக்கு வேறொரு பெண்ணை திருமணம் செய்து வைக்க இருப்பதாகவும் தெரிவித்தார். எதிரி ஏழுமலை எனது தம்பி தான் கிடைக்கவில்லை என்றும், அதனால் நீ என்னுடன் இரு என்று என் தங்கையை அசிங்கமாக பேசினார்.

4. குழந்தை பிறந்து ஒரு வருடம் வரை காத்திருந்து எதிரிகள் யாரும் என் தங்கையையும் குழந்தையையும் அழைத்துச்செல்லவில்லை. எனது தங்கை திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இந்த வழக்கானது 2016 வருடத்திய வழக்கு என்று எடுத்து கூறியும், போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No.13/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | சரஸ்வதி | வட்டம் | - | விழுப்புரம் |
| க/பெ. | | சாரங்கபாணி | சமயம் | - | |
| கிராமம் | - | அகரம் சித்தாமூர் | வயது | - | 60 |

23.02.2026

1 முதல் 4 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு-ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது அகரம்சித்தாமூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது மகள். கடந்த 2010 ம் வருடம் அ.சா.1 க்கும் 1 ம் எதிரிக்கும் பில்ராம்பட்டில் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்தின்போது எனது மகளுக்கு 15 பவுன் நகையும், கட்டில், பீரோ மற்றும் இதர சீர்வரிசை சாமான்களும் , வண்டிக்காக ரூ-50 ஆயிரம் கொடுத்தோம்.

2. திருமணத்திற்கு பின் எனது மகள் அங்கு 8 மாதங்கள் நல்ல முறையில் வாழ்ந்து வந்தாள். பின்பு எதிரிகள் என் மகளிடம் மேற்கொண்டு ரூ.50 ஆயிரம் பணத்தை வாங்கி வரச்சொல்லி அனுப்பி வைத்தார்கள். நான் என் மகளிடம் தற்போது கடனாக இருக்கிறது பணம் இல்லை என்று சொல்லி எனது மகளை மீண்டும் எதிரிகள் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன். அப்போது எதிரிகள் என் மகளை கொடுமை செய்து வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள்.

3. அப்போது எதிரி மூர்த்தி எனது மகள் கருப்பாக இருப்பதாகவும், அதனால் 1வது எதிரி அவருடன் சேர்ந்து குடும்பம் செய்ய விருப்பம் இல்லை என்று தெரிவித்ததாக கூறினார். மேலும் எதிரிகள் 1வது எதிரியை பெங்களூருக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எதிரி ஏழுமலை என் மகளிடம் என் தம்பியை வெளியூரில் இருக்கிறான். அதனால் நீ என்னுடன் வா என என் மகளை தவறாக பேசினார்.

4. பிறகு எதிரிகள் என் மகளை தள்ளி கதவை சாத்தியபிறகு என் மகள் எனக்கு கைபேசியில் தகவல் தெரிவித்தார். நான் எதுவாகயிருந்தாலும் உன் கணவர் உன்னை அழைத்துச் செல்வார் என்று நான் கூறினேன். ஆனால் 4 – 5 நாட்களாக எதிரிகள் என் மகளை வீட்டுக்குள் விடவில்லை என எனக்கு தகவல் தெரிவித்தார். பின்பு அவள் என் வீட்டிற்கு வந்துவிட்டார்.

5. பின்பு எனது உறவினர் எதிரிகள் வீட்டிற்கு சென்று பேசிப்பார்த்தார்கள். 1வது எதிரி எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை என்று மற்ற எதிரிகள் தெரிவித்தார்கள். அதனால் என் மகளை வீட்டுக்கு அழைத்து வந்து அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - இந்த வழக்கானது 2016 வருடத்திய வழக்கு என்று எடுத்து கூறியும், போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.